SOFA-I-M

# முதலாம் இடைப்பருவத் தேர்வு

மதிப்பெண்: 50

தமிழ்

வகுப்பு - ஏழு - ________

நேரம்: 2மணி

| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
| --- | --- |
| இடம்: | வரிசை எண்: |

**I. சரியான விடையை எழுதுக.** 10 × 1 = 10

1. ‘நெறி’ - என்னும் சொல்லின் பொருள் ________________

   அ) குறிக்கோள் ஆ) கொள்கை இ) வழி

2. வானில் ________________ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.

   அ) அகில் ஆ) முகில் இ) துகில்

3. மொழியின் முதல் நிலை பேசுதல் _____________

   அ) படித்தல் ஆ) கேட்டல் இ) எழுதுதல்

4. வாழை கன்றை ________________

   அ) ஈன்றது ஆ) வழங்கியது இ) கொடுத்தது

5. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது ________________

   அ) பச்சைக்காய் ஆ) கோலிக்குண்டு இ) செங்காய்

6. வாய்மை எனப்படுவது ________________

   அ) அன்பாகப் பேசுதல் ஆ) தீங்குதராத சொற்களைப் பேசுதல்

   இ) தமிழில் பேசுதல்

7. ‘குரலாகும்’ - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் _____________

   அ) குரல் + ஆகும் ஆ) குரல் + யாகும் இ) குர + ஆகும்

8. காடெல்லாம் - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

   அ) கா + டெல்லாம் ஆ) காடு + எல்லாம் இ) காடு + டெல்லாம்

9. வேட்டை + ஆடிய என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______________

   அ) வேட்டைஆடிய ஆ) வேட்டையாடிய இ) வேட்டாடிய

10. தீது + உண்டோ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________________

    அ) தீதுண்டோ ஆ) தீதுஉண்டோ இ) தீதிண்டோ

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

11. தமிழ் மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.
12. ‘ஒன்றல்ல இரண்டல்ல’ - பாடலில் இடம் பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.
13. மொழியின் இரு வடிவங்கள் யாவை?
14. குற்றியலிகரம் என்றால் என்ன?

15. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?

16. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?

17. எப்போது தன் நெஞ்சே தன்னை வருத்தும்?

**III. மனப்பாடப் பாடல்.** 4 + 2 = 6

18. ‘அருள்நெறி’ எனத் தொடங்கும் எங்கள் தமிழ் மனப்பாடப் பாடலை எழுதுக.

19. ‘வாய்மை’ எனத் தொடங்கும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக.

**IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

20. ‘எங்கள் தமிழ்’ பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

21. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

22. பேச்சு மொழிக்கும், எழுத்து மொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.

23. காடு பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.

24. நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

**V. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 15

25. சொல் பொருள் தருக. (2)

அ) விரதம் ஆ) உபகாரி இ) கொம்பு ஈ) பரவசம்

26. தொகைச் சொற்களை விரித்து எழுதுக. (2)

அ) முப்பால் ஆ) ஐம்பொறிகள்

27. சிறந்த அரசின் பணிகளை வரிசைப்படுத்துக. (2)

அ) பொருளைப் பிரித்துச் செலவு செய்தல்
ஆ) பொருள் வரும் வழிகளை அறிதல்
இ) சேர்த்த பொருளைப் பாதுகாத்தல்
ஈ) பொருள்களைச் சேர்த்தல்

28. பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக. (3)

அ) பசு, வீடு, ஆறு, கரு ______________
ஆ) அரசு, எய்து, மூழ்கு, மார்பு ______________
இ) பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு ______________

29. கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு திருக்குறள் அமைக்க. (3)

| | | | |
|---|---|---|---|
| பொருட்செல்வம் | எல்லாம் | பூரியார் | செல்வத்துள் |
| கண்ணும் | அருட்செல்வம் | உள | செவிச்செல்வம் |
| அச்செல்வம் | தலை | செல்வம் | |

1. ______________________________________
______________________________________
2. ______________________________________
______________________________________

30. ஊடகங்களை வகைப்படுத்துக. (3)

(வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், நூல்கள், திரைப்படம், மின்னஞ்சல்)

| எழுத்து மொழி | பேச்சு மொழி |
|---|---|
| | |